முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை : திருமதி. A. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி , திண்டுக்கல்**

2025–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**அ.வ. எண் 91/2018–ல் நி.ம.எண் 258/2021**
**C.N.R. No.TNDG01-005444-2021**

**கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் குருவாயூரப்பன் நகர், எண்.02 ல் வசிக்கும் திரு. ராதாகிருஷ்ணன் அவர்களின் மனைவி சுமார் 60 வயதுள்ள திருமதி பொன்னம்மாள். .. மனுதாரர் / வாதி**

// எதிராக //

**சென்னை 600 042 வேளச்சேரி விஜயநகரில் வசித்து வரும் தற்சமயம் திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் தாலுகா, கொடைக்கானல் டவுன் குறிஞ்சி ஆண்டர் கோவில் அருகில் குறிஞ்சி மலை முகடு, பிளாட் எண்.4 பி–ல் இருக்கும் பிருந்தாவன பிலிப் இன் என்ற லாட்ஜின் உரிமையாளர் திரு. வரதாசாரியார் அவர்களின் குமாரர் சுமார் 51 வயதுள்ள திரு. P.V. கிருஷ்ணன்**
**.. எதிர்மனுதாரர் / பிரதிவாதி**

அசல் வழக்கு எண் 91/2018 ல் 3.11.2020 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படி எதிர்மனுதாரர் தீர்ப்புத் தொகையை செலுத்தி வைக்காததால் எதிர்மனுதாரரை, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் கட்டளை 21, விதி 37 ன்படி பிடிகட்டளை அறிவிப்பு அனுப்பியும், விதி 38–ன்படி எதிர்மனுதாரரை வாரண்டில் பிடித்து வந்து சிவில் சிறையில் காவல்படுத்துவதன் மூலம் தீர்ப்பாணைத் தொகையை எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொடுக்க

உத்தரவிட வேண்டி மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் – 25.10.2021
இம்மனு கோப்பில் எடுக்கப்பட்ட நாள் – 10.12.2021

இந்த நிறைவேற்றுதல் மனு இந்நீதிமன்றத்தின் முன்னர் 13.2.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. B. வாசுதேவன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சுப்புராம் அவர்கள் முன்னிலையாகியும், மனு உரை, எதிருரை, வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்த

**உத்தரவாணை**

1. இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.
2. எதிர்மனுதாரரை கைது செய்ய வாய்தா 9.4.2025
3. படி செலுத்த ஒரு வார கால அவகாசம்.

**2025 ம்** ஆண்டு மார்ச் திங்கள் 4 ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையைப் பதித்து வழங்கப்பட்டது.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.07.15 13:48:38 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்
அ.வ. எண் 91/2018–ல்
நி.ம.எண் 258/2021
உத்தரவாணை
நாள். 4.3.2025